அனுப்புநர்

சா.சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள்இயக்குநர்,
சென்னை– 600 006.

பெறுநர்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
   இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

ந.க.எண். 020999 /எச்.1/2022 நாள்: 02.01.2023

ஐயா/ அம்மையீர்,

பொருள்: அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6 – மார்ச் / ஏப்ரல் 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் – சார்பு.

பார்வை: இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள்:18.10.2022 & 27.10.2022.

------

பார்வையில் காணும் கடிதங்களில் மார்ச் / ஏப்ரல் 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் விவரங்களடங்கிய பட்டியலில் மாணவர்களின் பெயர் சேர்த்தல் (By Transfer) / நீக்குதல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள 27.10.2022 முதல் 07.11.2022 வரையிலான நாட்களில் வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட மார்ச் / ஏப்ரல் 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியல் மற்றும் +1 Arrear பெயர் பட்டியலினையும், அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் 04.01.2023 – 2 PM முதல் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளமான www.dge1.tn.gov.in - க்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password –ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்./–
இயக்குநர்